# சித்திரக்கலை

# தரம் 9



## வினா - விடை

ஆசிரியர்: திரு.ப.கஜேந்திரன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# வேடமுகங்கள்

1. வேட முகங்கள் எவ்வாறு ஆக்கப்படுகின்றன ?
மனிதனொருவரின் அல்லது பிராணியொன்றின் உண்மையான தன்மையை மாற்றியமைத்து வேட முகங்கள் தயாரிக்கப்படுகின்றன.

2. வேடமுகம் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் மரம் எது?
   - ஏழிலைப்பாலை மரம்
   - கடல மாங்காய்

3. வேடமுகங்கள் ஏன் பயன்படுத்தப்பட்டன?
   - விலங்குகளில் இருந்துபாதுகாப்பு பெற
   - அவற்றை பயமுறுத்தவும்
   - விளைச்சல் அதிகரிக்கவும்.

4. உற்பத்தி செய்யப்படும் வேடமுகங்களின் வகைகள் யாவை?
   - அரசர் வேடமுகம்
   - கோலம் "
   - அரக்கர் "
   - சன்னி "
   - புத்தாக்க "

5. வேடமுகம் செயன்முறை பிரதான படிமுறைகள் எத்தனை? அவை யாவை?
இரண்டு
   1. செதுக்குதல்
   2. நிறமூட்டுதல்

6. வேடமுகம் வெட்டுபவர், நிறமூட்டுபவர் எவ்வாறு அழைக்கப்படுவர்?
சித்தரர்

7. பால் வற்றச்செய்தல் என்றால் என்ன?
புகையூட்டப்பட்டு, இளங்காற்றில் உலர வைப்பது

8. வட்டம் வெட்டுதல் என்றால் என்ன?
மரத்தை தேவையான அளவுக்கு சீவுதல்

9. வேட முகங்களில் எவை எவை வேறாக ஆக்கப்பட்டு இணைக்கப்பட்டன?
   1. தலைய் மயிர்
   2. மீசை
   3. தாடி
   4. பற்கள்

10. முகமூடிகளை தயாரித்து பூர்த்தி செய்யும் போது முதலாவதாக பூசப்படுவது எது?
வெண்பூச்சு

11. வெண்பூச்சு எவ்வாறு பெறப்படும்?
வெண்ணிறக்களியை கரைத்து வடித்து பெறப்படும்

12. இதற்காக தற்காலத்தில் பயன்படுத்துவது யாது?
இமல்சன் குழம்புப் பூச்சு

13. வேடமுகத்தை பாதுகாக்க பயன்படுத்தப்பயன்படும் எண்ணெய் எது?
தோரணைமர எண்ணெய்

14. இதனை பூசுவதன் காரணம் யாது?
வேடமுகத்தை மெருகுத்தன்மையும்,
ஈரலிப்பையும் தாங்குவதற்கும்.

15. இலங்கையில் எவ்விடங்களில் வேடமுக சேகரிப்பினை காணலாம்?

- ஆம்பலாங்கொடை
- மகாஅல்லாங்கொடை
- கொழும்பு
- மிரிசை

17. வேடமுக சேகரிப்பு காணப்படும் நாடுகள் எவை?

- ஜேர்மனி
- அமெரிக்கா
- இங்கிலாந்து
- அவுஸ்ரேலியா

18. இதற்கு பிரசித்தி பெற்ற இடங்கள் எவை?

- மிரிசை
- அம்பலாங்கொடை
- கோரளை

19. வேடமுகங்களுக்கு நிறம் தீட்டும்போது எவை கவனத்தில் கொள்ள வேண்டும்?

1. பாத்திரங்களின் இயல்பான இயல்பற்ற தன்மை
2. சமூக அந்தஸ்து
3. வயது
4. அங்க இயல்பு
5. ஆண் பெண் தன்மை




20. அரசன், அரச குடும்பம், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றவற்றுக்கு பயன்படும் நிறம் எவை?

- இளஞ்சிவப்பு
- செம்மஞ்சள்


- வெள்ளை
- மஞ்சள்

21. பொதுமக்களுக்கு பயன்படும் நிறம் எது?
    - கபிலம்
    - பச்சை சார்ந்த மஞ்சள்
    - நரை நிறம்

22. ஆதிமானிட பாத்திரத்துக்கு பயன்படும் நிறம்?
    1. சிவப்பு
    2. மஞ்சள்
    3. செங்கபிலம்


# பாய்பின்னல் அலங்காரம்





1. பாய் பின்னல் எத்தகைய கைத்தொழில்?
நாட்டார் கைத்தொழில் அல்லது கிராமிய கைத்தொழில்

2. இத்தொழிலுக்கு பயன்படும் புல் எது?
பன்புல் அல்லது சணல் நார்

3. பாய் பின்னலுக்கு பிரசித்தி பெற்ற இடம் எது?
தும்பறை மிட்டியாவத்தை

4. பாய் பின்னல் கைத்தொழிலின் பிறப்பிடம் எது?
கண்டியில் உள்ள ஹோவளைக் கிராமம்.

5. மலை நாடடில் உற்பத்தி செய்யப்படும் பாய் எது?

கின்னரப்பாய்

6. கின்னரப்பாய்களை எத்தனை வகையாக பிரிப்பர்?

மூன்று

1. பன்னம் தரை விரிப்புக்கள்
2. வேலைப் பாட்டு "
3. பறவைத்தரை "

7. பன்னம் தரை விரிப்புக்கள் என்றாள் என்ன?

எளிமையான கேத்திர கணித வடிவங்களையும் பன்னிறமுடைய பின்னல் வேலை கொண்டது.

8. வேலைப்பாட்டு தரை விரிப்புக்கள் என்றாள் என்ன?

கேத்திர கணித வடிவமைப்புக்கள்.பூ வேலைப்பாடுகள் கெண்ட பின்னல் வேலை.

9. பன்புல்லின் வகைகள் எவை?

1. ஹால் பன்புல்
2. ஹவன் "
3. பொது "
4. எலு "
5. ரகியா "
6. துன் கிறியா "

10. பன்புல்லினால் ஆக்கப்படும் பாவனைப்பொருட்கள் எவை?

1. பாய்
2. பெட்டி
3. உமல்
4. விசிறி
5. அகப்பை கொழுவி


11. இதற்கு பயன்படுத்தப்படும் அலங்காரங்கள் எவை?

1. சிலந்தி வலைக்கோலம்
2. பாம்புச்சண்டைக் கோலம்
3. முயல் கோலம்
4. பன்னிருக்கோலம்

12. பன்புல் கைத்தொழிலுக்கு பிரநித்தி பெற்ற இடம் எது?

- கம்பஹ
- காலி
- இரத்தினபுரி
- களுத்துறை

# சிகிரியா



1. சிகிரியாவை நிர்மாணித்தவன் யார்?
காசியப்பன்

2. சிகிரியாவை காசியபப்பன் அமைத்தற்கான காரணம்?
தந்தையை கொலை செய்த காரணத்தால் தம்பி முகலகலனுக்கு பயந்து.

3. சிகிரியா ஓவியம் எவ்வாறு அழைப்பர்?
ஈரச்சுதை (பிரஸ்கோ புவனோ)

4. இங்கு பயன் படுத்தப்பட்ட வர்ணங்கள் எவை?
சிவப்பு, பச்சை, நிறம் பிரதானமாகவும் பெண்களின் உடலுக்கு சிவப்பு, மஞ்சனள் நிறம் பயன்படுத்தப்பட்டது.

5. பிரஸ்கோ சிக்கோ முறை என்றாள் என்ன?
உலர்ந்த சாந்துப்படையிலன் மீது வரையப்பட்டவை.

6. இந்த ஓவியங்களை எவ்வாறு அழைப்பர்?
“டெம்பரா”

7. சிகிரியா ஓவியம் பற்றி கருத்து தெரிவித்த கலைஞ்ஞர்கள் யார்?
பேராசிரியர் செரனத் பரணவிதான

# இசிறுமுனியா விகாரை



1. இசுறுமுனியா விகாரை எக்காலத்துக்குரியது?
   அனுராதபுரக்காலபம்

2. இதனை அமைத்த மன்னன் யார்?
   தேவநம்பியதஸ்ஸ மன்னன்.

3. இதன் அருகில் காணப்படும் வாவியாது?
   திஸாவாவி.

4. இசுறுமுனியா விகாரை கட்டப்பட்டமைக்கான காரணம் ?
   மகிந்ததேரர் இசுறு வம்சத்தவர்கள் ஐந்நூறு பேருடன் வந்தபோது தேவநம்பிய திஸ்ஸ மன்னனால் அமைக்கப்பட்டது.

5. இங்கு காணப்படும் செதுக்கல்கள் யாவை?

   1. காதலர் சிலை.
   2. அரச குடும்பம்.
   3. மனிதனும் குதிரைத்தலையும்.
   4. நீராடும் யானைகள்.

6. காதலர் சிலை எம்மரபை தழுவியது?
   குப்த மரவு.


7. காதலர் சிலை எங்கிருந்து கொண்டுவரப்பட்டதாக கூறப்படுகிறது?
   ரண்மசுன் உயன (தங்க நாணய தோட்டம்))இல் இருந்து கொண்டுவரப்பட்டது.


8. காதலர் சிலை பற்றி பரணவதானாவின் கருத்து யாது?
   சாலிய குமாரனும் அசோகமாலாவும் என கூறுகின்றார்.

9. ஆனந்த குமாரசாமியின் கருத்து யாது?
   சிவனும் பார்வதியும் என கூறுகின்றார்.

10. பரணவிதான மனிதனும் குதிரைத்தலையும் எதனை குறிப்பன என கூறுகின்றார்?
    நெருப்பும் நீரும்.


13. நீரில் விளையாடும் யானைகள் எங்கு எச்சிற்பத்திற்கு ஒப்பானதாக கூறப்படுகின்றது?
    இந்தியாவின் மாமல்லபுரத்தில் உள்ள ஆகாய கங்கை சிற்பத்தை ஒப்பானதாக கூறப்படுகின்றது.







# அரக்கு



1. அரக்கு எவ்வாறு பெறப்படுகின்றது?
அரக்கு பூச்சியின் உடலில் இருந்து வெளிப்படும் ஒட்டும் தன்மையுடைய ஒரு வகையான பொருளினால் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2. அரக்கு எத்தனை வகைப்படும்?
இரண்டு வகை.

3. அவை யாவை?
பட்டை வேலை
நக வேலை

4. அரக்குத் தொழில் எவ்நாடுகளில் இடம் பெறுகின்றன?
யப்பான்
சீனா
இந்தியா
பத்மா
இலங்கை

5. இலங்கையில் அரக்கு தொழிலுக்காக அமைந்த இடம் எது?
ஹங்கிடி வசம்.

6. அரக்கு தொழில் கலைஞ்ஞர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
வேற்கலைஞர்கள்.

7. அரக்கு தொழிலுக்கு பிரதான மூலப்பொருள் என்ன?
அரக்கு

8. கோன் அரக்கை வேறு எவ்வாறு அழைப்பர்?
கப்பெட்டியா.

9. அரக்கு வகைகள் எவை?
கோன் அரக்கு
தலகிரியா அரக்கு

10. பிரகாசமான அரக்கு எது?
தலகிரியா

11. அரக்கு தேவையான நிறங்கள் எவற்றில் இருந்து பெறப்படுகின்றன?
சிவப்பு – சாதிலிங்கத்தில்
மஞ்சள் – மஞ்சள் நிறசறளைக்கல்
கறுப்பு – கெக்குன் வித்துப் புகை.
பச்சை – மஞ்சள் நிறத்துடன் நீலம் கலத்தல்.

12. கலைஞ்ஞர்கள் அழகு படுத்த பயன்படுத்திய முறைகள் யாவை?
புட்டையில் இட்டு அலங்கரித்தல்
நகத்தினால் அலங்கரித்தல

13. அழகுப் பொருட்களில் மினுமினுப்பும் பிரபாசமுபம் ஏற்படகாரணம் யாது?

ஆக்கப்படைகள் பாவனைப் பொருட்கள் மீது தேங்காய் எண்ணெயில் தோய்த துண்டினால் தோய்பதன் மூலம் மினுமினுப்பையும் பிரகாசமும் பெறும்.

14. எவ்வாறன அலங்காரங்கள் இடம்பெறுகின்றன?

அரசிலை

தனியிலை

ஈரிழை

தாமரை மலர்.

15. இலங்கையில் அரக்கு வேலைக் கைத்தொழில் காணப்படும் பிரதேசம் எது?

1. மாத்தளை – ஹப்புவிதை
2. தங்காலை – அங்குள்மடுவை
3. பலாங்கொடை – பல்லேகந்தை

# புத்தசிலைகளின் முத்திரைகள் ஆசன முறைகள்

1. புத்தசிலைகள் எவ்எவ் நிலைகளில் அமைக்கப்படுகின்றன?
நிற்கும் சிலைகள்
அமர்ந்திருக்கும் "
துயில் கொள்ளும் சிலைகள்

2. புத்தசிலைகளில் காணப்படும் முத்திரைகள் எவை?
தியானம்
துர்மசக்கரம்
துக்கம்
அபயம்
பூமி தொடுகை
வரம்

3. ஆசன முறை என்றாள் என்ன?
புத்தசிலைகள் அமர்ந்து இருக்கும் முறை 5 ஆபயம் கொடுப்பதை காட்டுவதற்கு
அல்லது பாங்கு ஆகும்.

4. பிரதான ஆசன முறைகள் எவை?
- வீராசனம்
- பத்மாசனம்
- பத்ராசனம்
- வச்சிராசனம்

5. தியான முத்திரை எதற்கு பயன்படும்?
புத்தர் தியானத்தில் இருப்பதை காட்டுவதற்கு.

6. அபய முத்திரை எதற்கு பயன்படும்?
ஆபயம் கொடுப்பதை காட்டுவதற்கு.

8. தர்மசக்கர முத்திரை எதற்கு பயன்படுத்தப்படுகின்றது?
தர்மசக்கர சூத்திரத்தை போதித்த சந்தர்பத்தை காட்டுவதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

9. துக்க முத்திரை எதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது?
ஏனையோரது துக்கத்தில் தானும் துக்கப்படுவதாக பயன்படுகின்றது.



**பத்மாசனம்**




**தருக்க முத்திரை**



வீராசனம்

# சமாதிப் புத்தர் சிலை



1. இப்புத்தசிலை எப்போது எம்மன்னன் காலத்தில் அமைக்கப் பட்டது?
   கி.பி. 4ம் நூற்றாண்டில் மகாசேனன் காலத்தில் அமைக்கப்பட்டது.

2. இவ்விகாரை எங்கு அமைந்துள்ளது?
   அனுராதபுர அபயகிரி விகாரை சுற்றுப்பிரகாரத்தில் அமைந்துள்ளது.

3. இப்புத்தசிலை எவ்வூடகத்தால் ஆனது?
   கருங்கல்

4. இச்சிலை எவ்வாறான முறையில் அமைந்துள்ளது?
சமாதி நிலையில் தியானமுத்திரையுடன் வீராசன முறையில் அமைந்துள்ளது.

5. இச்சிலையின் உடையமைப்பு எவ்வாறு உள்ளது?
அலைவரிசையை கொண்டதும் உடலுடன் ஒட்டிய தன்மையுடன் காணப்படும்.

6. ஏச்சிற்ப முறையில் அமைந்துள்ளது?
குப்த சிற்பமுறையில்

# அவுக்கனை புத்தர்சிலை



1. இத்தாது கோபம் எப்போது எம்மன்னனால் அமைக்கப்பட்டது?
   கி.பி 5ம் நூற்றாண்டில் தாதுசேனன் கட்டியது.

2. இச்சிலை எங்கு அமைந்துள்ளது?
   அனுராதபுரத்தில் அவுக்கனை என்னும் கிராமத்தில்.

3. எவ்வுடகத்தினால் ஆனது?
   கருங்கல்.

4. இச்சிலை எவ்நிலையை உடையது அதன் உயரம் யாது?
   நின்றநிலை 38அடி10அங்குலம் உயரம்.

5. இச்சிலையின் கைகள் காட்டும் முத்திரை யாது?
   வலது கை அபயமுத்திரையும் இடது கை காவியுடையையும் தாங்கியுள்ளது.

6. தலையில் காணப்படும் அமைப்பை எவ்வாறு அழைப்பர்?
   சிரகணியென்று ஜதீச்சுடர்ஸ

7. இச்சிலை எக்கலைமரபை கொண்டுள்ளது?
   ஆமராவதி கலைமரவு.

# தொழுவிலா புத்தர்சிலை



1. இப்புத்த சிலை எங்கு கண்டெடுக்கப்பட்டது?
   தொலுவிலா பிரதேசத்தில்.

2. இது எத்தனையாம் நூற்றாண்டுக்கு உரியது?
   கி.பி 7ம் நூற்றாண்டிற்கு.

3. இது எந்நிலையை கொண்டுள்ளது?
சமாதி நிலையை கொண்டுள்ளது.

4. எத்தகைய முத்திரையும் எவ்வாசன முறையில் அமைந்துள்ளது.?
தியான முத்திரையும் வீராசன முறையில்.

5. இச்சிலை எத்தகைய தோற்றத்துடன் காணப்படுகின்றது?
முகத்தில் சாந்தமும் உடலுடன் ஒட்டிய ஆடை அமைப்புடன் காணப்படும்.

6. இச்சிலை தற்போது எங்குள்ளது?
கொழும்பு அரும்பொருட்காட்சி சாலையில்.

# நிஸ்ஸங்கலதா மண்டபம்



1. நிஸ்ஸங்கலதா மண்டபம் எங்கு நிர்மாணிக்கப்பட்டது?
பொலநறுவையில்.


2. இம்மண்டபம் எத்தனை தூண்களையும் எவ்வடிவத்தையும் கொண்டது?
எட்டுத் தூண்களையும் நீள் செவ்வக வடிவையும் கொண்டது.

3. இம்மண்டபத்தை அமைத்த மன்னன் யார்?
நிஸ்ஸங்கமல்லன்.

4. இம்மண்டபத்தை மன்னன் அமைத்ததன் நோக்கம் யாது?
தர்ம போதனைகளை கேட்பதற்காகவும், தந்த தாதுவை வழிபடுவதற்காவும், பிரித் போதனையை கேட்பதற்காகவும்.

5. நிஸ்ஸங்கலதா மண்டப தூண்கள் எத்தகைய வடிவம் கொண்டவை?
நீரினுள் இருந்து வெளியே எடுக்கப்பட்ட தாமரை மலர் போன்று உச்சியில் மலர்ந்த தாமரை பூவையும் தண்டின் இடையே தாமரை இலைகள் செதுக்கியும் கலைஞ்ஞர்கள் படைத்துள்ளனர்.

# பொலநறுவை வட்டதாகே



1. வட்டதாகே என்றால் என்ன?
மழை வெயில் என்பனவற்றில் இருந்து பாதுகாப்பதற்கும் அடியார்களின் வசதிக்காகவும் வட்டதாகே அமைக்கப்பட்டது.
2. வட்டதாகேயின் மறுபெயர்கள் எவை?
    - அசைத்தியகர
    - துாபகர
3. இது எத்தகைய துாபிகளுக்கு அமைக்கப்படும்?
சிறிய துாபிகளுக்கு மட்டுமே.
4. வட்டதாகேய அமைக்க பயன்படுத்தப்பட்டது யாது?
கூரையை தாங்கும் பொருட்டு கற்துாண்கனள் 5 வரிசையில் அமைக்கப்பட்டன.
5. பொலநறுவை வட்டதாகேயவை அமைத்த மன்னன் யார்?
நிஸ்ஸங்க மல்லன்.

# இந்து ஆலயம்

1. இலங்கையில் இந்து ஆலயம் அமைக்கப்பட்ட காலம் எது?

பொலநறுவைக்காலம்.

2. பொலநறுவையில் இந்து ஆலயம் காணப்பட்டதற்கான சான்றுகள் எவை?

- சில ஆலயங்களின் எச்சங்கள்
- முழுமையான இரண்டு சிவாலயங்கள்.

3. ஆச்சிவாலயங்கள் எவை?

- 1ம் சிவாலயம்
- 2ம் சிவாலயம்

# முதலாம் சிவாலயம்

1. 1ம் சிவாலயம் எத்தனையாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது?

   13ம் நூற்றாண்டு.

2. ஏக்கட்டிடக்கலை மரபை கொண்டது?

   பாண்டிய கட்டடக்கலை.

3. இவ்வாலய தூண்கள் எவ்வடிவை கொண்டவை?

   தாமரை.

4. இங்கு கண்டெடுக்கப்பட்ட இந்து சிலைகள் தற்போது எங்குள்ளன?

   கொழும்பு நூதனசாலையில்.

5. முன்தள்ளிய கட்டிட அமைப்பு எவ்வடிவில் அமைந்துள்ளது?



# 2ம் சிவாலயம்



- 2ம் சிவாலயம் எப்போது அமைக்கப்பட்டது?
  11ம் நுற்றாண்டு.

- எம்மன்னர்களின் ஆட்சியில் அமைக்கப்பட்டது?
  சோழமன்னர்கள்.

- இச்சிவாலயத்தின் மறுபெயர் என்ன?
  மகாதேவி ஈஸ்வரம்.

- ஏச்சிற்ப முறையில் அமைக்கப்பட்டது?
  சோழ சிற்ப முறையில்.

- இங்கு கிடைக்கப்பட்ட சிலைகள் தற்போது எங்கு உள்ளன?
  கொழும்பு நூதனசாலை.

- பொலநறுவைக் காலச்சிலைகள் எவை?
  - சிவன்
  - சிவனும் பார்வதியும்
  - பார்வதி
  - நடராஜர்
  - காரைக்கால் அம்மையார் .
  - இசுறு முடையாா

# திவங்க ஆலயம்



1. இவ்வாலயம் எத்தனையாம் நூற்றாண்டுக்குரியது?
கி.பி 12ம் நூற்றாண்டு.

2. இவ்வாலயத்தை அமைத்த மன்னன் யார்?
மகா பராக்கிரமபாகு.

3. இவ்வாலயம் எங்கு அமைந்துள்ளது?
பொலநறுவையில்.


4. இவ்வாலய ஆரம்ப கால ஓவியற்கள் எங்கு காணப்படுகின்றன?
கர்ப்பக்கிரகத்தில்.

5. தேவ ஆராதனை ஓவியம் என்றால் என்ன?
தேவலோகத்தில் காணப்படும் போதிசத்துவரை மீண்டும் இவ்வுலகில் பிறக்கவேண்டும் என அழைக்கப்படும் ஓவியம்.

6. இவ்வாலயத்தில் காணப்படும் ஓவியங்கள் எவை?
   - புத்தர் சங்கிஸ்ஸபுரத்துக்கு வருகை தரல்
   - தேமிய ஜாதகம்
   - சுச ஜாதகம்
   - ஆசங்கவதி ஜாதகம்

7. இவ்வோவியங்கள் தற்போது எவ்நிலையில் காணப்படுகின்றன?
தற்போது அழிந்த நிலையில் காணப்படுகின்றன.

# கல் விகாரை









1. ஒரேகல்லில் நான்கு புத்தர் சிலைகள் காணப்படும் விகாரை எது?
கல்விகாரை

2. இங்கு எத்தனை நிலைகளில் புத்தசிலைகள் காணப்படுகின்றன?
3 நிலைகளில்

3. இவ்விகாரை எக்காலத்துக்குரியது?
பொலநறுவை

4. எம்மன்னன் காலத்துக்குரியது?
மகாபராக்கிரமபாகு மன்னன்.

5. இங்கு காணப்படும் புத்தசிலைகள் எச்சிற்ப முறையில் அமைந்தவை?
பல்லவ சிற்ப முறையில்

6. சமாதிப்புத்தசிலை எவ்வாசனத்தில் எவ்நிலையில் காணப்படு கின்றன?
வஜிராசனத்தில்
தியானிக்கும் நிலையில்

7. வித்தியாதரக்குகை புத்தசிலையின் ஆசனம் நிலையாது?
வீராசனம் தியான முத்திரையில் அமர்ந்த நிலையில்

8. இச்சிலைக்கு மேலே காணப்படுவது யாது?
குடை

9. இப்புத்தசிலையின் இருபுறமும் காணப்படுவது யாது?
    - சாமரை தாங்கிய வித்தியாதரர் இருவர்
    - இரண்டு சிங்கம்.

# பொத்குல் விகாரைச்சிலை



1. இவ்விகாரைச்சிலை எங்கு அமைந்துள்ளது?

   மகாபராக்கிரம சமுத்திரத்திற்கு அருகே பொத்கல் விகாரையின் முன்னே காணப்படுகின்றது.

2. இச்சிலை கையில் எதனை தாங்கியுள்ளது?

   ஏடு

3. கையில் உள்ள பொருள் பற்றி பரணவிதாரணவின் கருத்து யாது?

   ஆ[illegible]சை குறிப்பதாக கூறியுள்ளார்.

4. இச்சிலையினை வேறு எப்பெயர்களால் அழைப்பர்?

   - அகத்தியர்
   - புலஸ்தியர்

# பனாம்பிட்டிய அம்பல மரச்செதுக்கல்

1. இலங்கையில் எஞ்சியுள்ள அம்பலம் எது?
   பனாம்பிட்டிய அம்பலம்.

2. இது எங்கு அமைந்துள்ளது?
   குருணாகல் அனுராதபுர வீதியில் பனாம்பிட்டிய வயல்வெளி அருகில்.


3. இவ்அம்பலம் எதற்காக அமைக்கப்பட்டது?
   நீண்ட தூரம் பயணிப்போர் இளைப்பாறும் இடம்.

4. இதன் நீளம் அகலம் யாது?
   நீளம் –12 அடி 4அங்குலம்
   அகலம் – 9 அடி 6அங்குலம்

5. இது எவ்வாறான தோற்றம் கொண்டது?
   குற்றிக்கற்கள் மீது நீளப்பாடாகவும் குறுக்காகவும் வைக்கப்பட்ட மரப்படை ஒன்றின் நிலைக்குத்தாக மரத்தூன்கள் நடப்பட்டு நான்கு முகப்பு கூரை கொண்டது.

6. இதில் காணப்படும் செதுக்கல்கள் எவை?
   - மல்யுத்தம்
   - மலைநாட்டு நடனக்கலைஞ்ன்
   - நடனமாடும் பெண்
   - ஆணுக்கு உணவு பரிமாறும் பெண்
   - மரியாதை செலுத்திக்கொள்ளும் இரு பெண்கள்








# ஆதித்தியா தெய்வம்



1. ஆதித்தியா தெய்வம் எம்மதத்தவர் வழிபடுவர்?
இந்துக்கள்

2. இத்தெய்வத்திற்காக நடாத்தப்படும் உற்சவம் யாது?
தைப்பொங்கல்

3. ஆதித்தியா தெய்வத்தின் மறுபெயர்கள் யாவை?
சூரியன்
தீ
வானம்
பகலவன்
இந்திரன்

4. இத்தெய்வம் மக்கழுக்கு எவை எவற்றை வழங்குகின்றது?
இரவையும் பகலையும் உருவாக்கி மக்களுக்கு சக்தியை வழங்குகின்றது.

5. இத்தெய்வத்திற்கு இந்துக்கள் எப்போது உற்சவம் எடுப்பர்?
தை மாதத்தில்

6. இத்தெய்வம் எவ்வகையைச் சேர்ந்த தெய்வம்?
பஞ்ச தேவ மண்டலத்தை சேர்ந்த தெய்வம்

7. சிற்ப கலைஞ்ஞர் இச்சிலையின் ஊடாக எதனை வெளிக்காட்டியுள்ளார்?
அழகிய ஆடை ஆபரணங்களின் அலங்காரம் அங்கச் சிறப்பியல்புகள்
தலையணி கழுத்தணி இடுப்பணி

8. ஆதித்தியா தெய்வத்தின் வடிவங்கள் யாவை?
   1. ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட கிரமத்தில் செல்லும் ஆதித்தியா
   2. இரு கைகயளிலும் தாமரை மொட்டுக்களை ஏந்தி நிற்கும்
   3. நான்கு கைகளை கொண்ட ஆதித்தியா

# சாரணாத் புத்தர்சிலை

1. இச்சிலை எக்காலப்பகுதிக்குரியது?
குப்தர் காலம்

2. எவ்வகையான ஊடகத்தினால் ஆனது?
சூனார் பிரதேசத்தில் காணப்படும் மணற்கல்லினால்

3. இச்சிலையினால் உணர்த்தப்படும் கருத்து யாது?
வாரதனதசியல் இசிப்பத்தனை மிகதாய என்னுமிடத்தில் புத்தபெருமான் 5 தபசிகளுக்கு முதல் முதலாக தருமபேதனை செய்த விதம் இச்சிலையினால் உணர்த்தப்படுகின்றது.

4. எவ்வகையான ஆசனத்தில் எவ்முத்திரையை காட்டி நிற்கின்றது?
பத்மாசன முறையில் அமர்ந்து தர்மசக்கர முத்திரையை காட்டி நிற்கின்றது.

5. இச்சிலையின் பின்புறத்தே காணப்படும் ஒளிவட்டம் பற்றி விளக்குக?
ஒளிவட்டத்தில் நுணுக்கமான பிந்து கோலமும் கொடியலங்காரமும் செதுக்கப்பட்டு இரு புறமும் இரண்டு தேவதை உருவம் உள்ளன.

6. ஒளிவட்டத்தின் கீழ் காணப்படும் செதுக்கல்கள் யாவை?
இருபுறமும் மகர குதிரை உருவங்களோடு இணைந்த அழகிய செதுக்கல்கள் உள்ளன

7. இச்சிலையின் ஆளுமையை காட்டுவன யாவை?
    1. முடி
    2. பாதி மூடிய கண்கள்
    3. நீண்ட காதுகள்

# காந்தார புத்தசிலை



1. குாந்தார புத்தசிலையின் மறுபெயர் என்ன?
குடினச்செயலைக்காட்டும் புத்தசிலை

2. இச்சிலை எப்பிரிவினரால் செதுக்கப்பட்டது?
முகாயான பிரிவைச் சேர்ந்த குஷாணர்களினால் இயற்கைத் தன்மையுடன் செதுக்கப்பட்டது

3. இச்சிலை எதற்கு முதன்மை அளித்து செதுக்கப்பட்டது?
இயல்பான தன்மைக்கு முதன்மை அளிக்கப்பட்டது


4. இச்சிலை செதுக்கப்பட்ட ஆண்டு யாது?
கி.மு 1ம் நுற்றாண்டு


5. ஏவ்வுடகத்தினால் ஆக்கப்பட்டது?
குரடான கருங்கல்

6. குலைஞ்ஞன் இப்புத்தசிலையின் உடலமைப்பை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?
உட்குழிந்த வயிறு வெளித்தள்ளிய விலா எலும்புகள் குழிவிழுந் கண்கள் சுருங்கிய தோல் மொலிந்த உடல் ஆகிய வற்றினுடாக தசையும் எலும்பும் கொண்ட உடலைக் காட்டியுள்ளார்

7. குரடான கருங்கல்லிலை பயன்படுத்தியமைக்கான காரணம் யாது?

# எம்பக்க தேவாலயம்





1. எம்பக்க தேவாலயம் எதற்குப் பெயர் பெற்றது?
   மரச்செதுக்கல் வேலைப்பாட்டிற்கு

2. எம்மன்னனால் அமைக்கப்பட்டது?
   14ஆம் நூற்றாண்டில் கம்பளையை ஆட்சிசெய்த 3ஆம் விக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்டது.

3. இத் தேவாலயம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?
கண்டியில் உடுநுவர பிரதேசத்தில்

4. எம்பக்க தேவாலயம் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது?
கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரிகள் தேவை கருதி அமைக்கப்பட்டது.

5. இத் தேவாலயத்தின் கூரையமைப்பை எவ்வாறு அழைப்பர்?
மடல் குருப்பாவ

6. மடல் குருப்பாவ என அழைக்கப்படும் பொருள் எது?
மரவளைகளை இணைப்பதற்குப் பயன்படுத்திய மர ஆணி

7. கூரையை இணைப்பதற்கு பயன்படுத்திய மரவளைகள் எத்தனை?
16

8. வாகல் மண்டபத்தில் காணப்படும் தூண்கள் எத்தனை?
10

9. நீள் மண்டபத்தில் காணப்படும் தூண்கள் எத்தனை?
32

10. இங்கு சிற்ப வேலையைச் செய்த சிற்பி யார்?
தெல்மட மூலாச்சாரியும் அவரின் மாணவர்களும்


11. இங்கு பயன்படுத்திய மரத்தின் பெயர் என்ன?
கம்மாளு, கிணிச்சப்பு, பிகிம்பியா

12. இங்கு அமைக்கப்பட்ட சிற்பங்கள் எத்தகைய புடைப்புக்கொண்டவை?
சிறு புடைப்பு (அல்ப உன்னத)


13. சிற்பங்கள் எவை எவற்றில் அமைக்கப்பட்டுள்ளன?
தூண்களின் சதுரங்களில், குறுக்குச் சட்டம் கூரையின் பக்கப் பலகை


14. இத் தேவாலயத்தில் காணப்படும் சிற்பங்கள் எவை?
நடன மாது
றபான் அடிப்போர்
பாலூட்டும் தாய்
போர் வீரன்
ஹம்ச பூட்டுவ
நாரிலதா
கின்னரப்பெண்
கஜசிங்கம்

அம்பக்கே தேவாலயத்தில் தற்போது காணப்படும் செதுக்கல் வேலைகள்



இரு அன்னங்கள்



சிங்கம்


படை வீரர்கள் (வெளிநாட்டு)


மரச்செதுக்கு வேலை


கிம்பிகி முகம்


நடனப் பெண்



சாயி பிறிண்டேர்ஸ் - கோண்டாவில். 077 2209474